**நாவுல பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 10 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 06 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 29 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாவுல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,076,555 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமை திரண்ட நிதியத்தில் சரியாக சீராக்கம் செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வருமான செலவினக் கணக்கில் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் ரூபா 1,881,190 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெறவேண்டிய ரூபா 2,492,978 கூட்டுத்தொகையான வேலைக் கடன்பட்டோர் மீதி செலுத்த வேண்டிய ரூபா 3,591,825 கூட்டுத்தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் மீதி மற்றும் ரூபா 21,245 கூட்டுத்தொகையான ஏனைய 03 கடன்கொடுத்தோர் மீதிகள் என்பன நிதிக் கூற்றுகளில் கைவிடப்பட்டிருந்தன.

(இ) 2007 செப்தெம்பர் மாதத்தின் போது நாவுல பிரதேச செயலகத்தின் கையளித்தல் கட்டளையின் மூலம் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த 10.56 பேர்ச் அளவான இரண்டு காணிக் கூறுகளின் கிரயம் மற்றும் 2006 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையக் கட்டிடத்தின் கிரயம் என்பன மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) மாகாண சபை மற்றும் பிரதேச அமைச்சிலிருந்து மானியமாகக் கிடைத்திருந்த டிப்பர் வண்டிகளும், உழவு இயந்திரங்களும் கிரயம் கணக்கீடு செய்யப்படாது ரூபா 10,178,880 தொகையான காப்புறுதி பெறுமதிக்கு மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் 2006 ஆம் ஆண்டின் போது மத்திய மாகாண பிரதம அமைச்சின் மானியமாக வழங்கப்பட்டிருந்த டெக்ரர் டேலரின் கிரயம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் வேலைகளை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தக்காரருக்கு 03 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 450,800 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாத முற்பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து வில்கமுவ பிரதேச சபைக்குக் கிடைத்து அந்த சபையினால் நாவுல பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 145 கல்வனைஸ் குழாய்களில் சபையிடம் காணப்பட்ட 106 கல்வனைஸ் குழாய்களின் பெறுமதியான ரூபா 117,342 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 50,630,707 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 476,422 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,297,715 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 167,314 கூட்டுத்தொகையான 05 மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 25,565,065 ஆக இருந்ததுடன் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 214,538 தொகையான மீதியும் அதில் உள்ளடங்கி உள்ளது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 6,459,005 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 449,747 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,987,996 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 2,538,249 வீழ்ச்சியைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிலும் முன்னைய 02 ஆண்டு காலப்பகுதிலும் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான சில முக்கியமான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மிகையை செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாக எடுப்போமாயின் அந்த சதவீதத்தில் தொடர்ச்சியான வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது.

(ஆ) மொத்த வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே விகிதாசாரத்தால் தொடர்ச்சியான உயர்வொன்றைக் காண்பித்ததுடன் அது நிதிக்கட்டுப்பாடு தொடர்பாக திருப்திகரமான நிலையில் இல்லாதிருந்தமை கணக்காய்வின் கருத்தாகும்.

**2.3 வருமானநிர்வாகம்**

**2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த ஆதனவரி மீதி ரூபா 1,889,807 ஆகவும் பற்றுச்சீட்டிடல் ரூபா 1,673,976 ஆகவும் இருந்தன. ஆண்டின் போது அறவிடல்கள் முறையே ரூபா 631,203 ஆகவும் ரூபா 875,810 ஆகவும் இருந்தன. அதன் பிரகாரம் ஆதனவரி அறவிடலின் சதவீதம் முறையே 33 சதவீதமாகவும் 52 சதவீதமாகவும் இருந்தமையால் ஆதனவரி அறவிடலின் சதவீதம் திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை.

**2.3.2 ஆதனவரி**

நிலுவையாக இருந்த ஆதனவரி மற்றும் மிகைக் கட்டணம் என்பன முறையே ரூபா 2,056,770 ஆகவும் ரூபா 407,843 ஆகவும் இருந்ததுடன் நிலுவையான ஆதனவரி மீதியில் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 89,482 தொகையான மீதியும் உள்ளடங்கியிருந்தது.

**2.3.3 வாடகை**

(அ) 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்படாமல், பொதுக்கூட்டத் தீர்மானத்தின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்பட்டிருந்ததுடன் சில கடைகளின் வாடகை உடன்படிக்கையும் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த வாடகைக் கணக்குகளின் மீதி ரூபா 278,020 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 195,385 மீதியும் உள்ளடங்கியிருந்தது.

### 2.3.4 ஏக்கர் வரியும் கழிவுப்பொருள் வரியும்

---

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த ஏக்கர் வரி மீதி ரூபா 23,684 ஆகவும் நிலுவையாக இருந்த கழிவுப்பொருள் கட்டண மீதி ரூபா 19,613 ஆகவும் இருந்ததுடன் அந்த மீதிகள் 5 வருட காலமாக மாற்றமின்றி முன் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 442,253 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 1,200,000 தொகையும் அறவிடவேண்டியிருந்தன.

### 2.3.6 விளம்பர அறிவித்தல் கட்டணம்

---

பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல் பதாதைகளிலிருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் Vii(ஊ) மற்றும் XXX உப பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 138,315 தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 மிகைக் கட்டணம்

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்குரிய ரூபா 7,335 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய எஸ்பீ/ஆர்டீ/02/10 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பிரிவின் ஆலோசனைகளைப் பின்பற்றாது சபைக்குச் சொந்தமான நாவுல கணுமுலயாய காணியில் பிரதேச சபையின் தலைவர் தமது வதிவிட வீட்டை நிர்மாணித்திருந்ததுடன் வேறுதரப்பினர்களும் அந்தக் காணியில் வியாபாரங்கைள நடாத்திச் செல்லகின்ற போதிலும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினால் அது தொடர்பில் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் ஈ - நெணபியச தகவல் தொழில்நுட்ப மேம்படுத்தல் செயற்திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டின்போது ரூபா 607,617 பெறுமதியான 10 விடயங்களுக்குரிய 22 பொருட்பதிவேட்டு அலகுகள் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 சனவரி 23 ஆந் திகதி விபத்திற்குள்ளாகிய டபள்கெப் வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக செலவிடப்பட்ட தொகையில் காப்புறுதி உரித்து மூலம் மேவுகை செய்யப்படாத ரூபா 152,200 தொகையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுகக்ப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு இனங்காணப்பட்டிருந்த 609 வியாபாரக் கடைகளிலிருந்து 76 வியாபாரக் கடைகளுக்காக மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 533 வியாபாரக் கடைகள் அனுமதிப்பத்திரம் பெறாது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. எவ்வாறாயினும், அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக நிறுவனங்களிலிருந்து பணம் அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) 1995 திசெம்பர் 27 ஆந் திகதிய 95/9 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதம செயலாளரின் கணக்குகள் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 378,840 தொகையான நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 விளைவற்ற / குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

---

ரூபா 100,000 பெறுமதியான கை ரெக்ரர், டேலர் மற்றும் தண்ணீர் பவுசர் என்பன 10 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**3.4 இனங்காணப்பட்ட நட்டம்**

---

மாகாண சபை மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் மூலம் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் வழங்கப்பட்ட கல்வனைஸ் குழாய்களில் ரூபா 40,959 கிரயமான 37 குழாய் அலகுகளின் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

(அ) 2014 மே 05 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காத செயற்பாடுகளுக்காக ரூபா 1,031,822 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபை வீதிக்கு இடையூறாகவுள்ள கல்லொன்றை உடைத்து அகற்றும் போது மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறு விலையினை விட ரூபா 150,760 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------------

**ஒபல்கம குடிநீர் உத்தேசத் திட்டம்**

-----------------------------------------------------------------

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் ஒபல்கம குடிநீர் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஒபல்கம கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் வேலையினை ஆரம்பிப்பதற்காக ரூபா 196,000 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. சங்கத்தினால் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாதிருந்த போதிலும் முற்பணத்தொகை 2015 மார்ச் 17 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

-------------------------------------------------------------

சபையின் டெக்டரையும் ஊழியர்களையும் பயன்படுத்தி சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 02 தொன் அளவான கழிவுப் பொருட்களை சேருதண்டாபொல காணிக்கு எடுத்துச் சென்று கழிவுகளை குழிகளில் இட்டு மண்ணால் மூடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் கழிவுக் குழிகளை வெட்டுவதற்கு ரூபா 70,000 செலவிடப்பட்டிருந்தது. சேருதண்டாபொல காணியில் கழிவு முகாமைத்துவத்திற்காக 2006 ஆம் ஆண்டின்போது கட்டிடமொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அக்கட்டிடம் உரிய பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

----------------------------------------------------------------------

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------------------

எழுத்துமூல கடமை கையளிக்கப்படாமல் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு பெண் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தருக்கு வேறு கடமைகளும் கையளிக்கப்பட்ட காரணத்தால் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) 04 வருமான விடயங்களின் ரூபா 11,910,000 தொகையான மதிப்பிடப்பட்ட வருமானங்களில் எந்த வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன் மேலும் 09 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 1.76 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) 17 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 21,333.570 தொகையான மொத்த நிதி ஏற்படும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 33 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 02 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) வாகனக் கட்டுப்பாடு

(ஊ) கடன்பட்டோர் கட்டுப்பாடு

(எ) ஒப்பந்த நிருவாகம்